
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | டிசம்பர் 1988 | இதழ் 12

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

# மன்னிக்கவும்.

சில தவிர்க்க முடியாத காரணங்களால் நவம்பர் இதழில் அறிவித்த பிரகாரம் டிசம்பர் 28, 29 1988-ல் நடக்க விருந்த கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் கருத்தரங்கம் 1989-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13,14 தேதிகளுக்கு ஒத்திப் போடப் பட்டிருக்கிறது.

சிரமத்துக்கு மன்னியுங்கள். புதிய ஆண்டில் புதிய பொலிவோடும், புதிய சிந்தனையோடும் கருத்தரங்கத்தில் கலந்து கொள்ள ஆயத்தமாகுங்கள் ஜெபியுங்கள்.

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆசிரியர்

## இதழின் உள்ளே


காலத்தால் அழிக்க முடியாத இயேசுவின் உபதேசங்கள் 1

சாத்தான் ஜாக்கிரதை! 4

சத்தியத்தையும் அறிவீர்கள் 7

பிசாசைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? 12

ஆரோக்கியமான உபதேசம் 16

பிரசங்கிமார்களுக்கு பவுலடியார் கூறும் ஆலோசனைகளும் அறிவுரைகளும் 19

இது என்ன மயமாய் முடியும்? 26

# THIRUMARAI AASAAN

Editor: E. Z. SELVANAYAGAM | Honorary Editor J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 1 December 1988 Issue 12


**ஆசிரியவுரை**

## காலத்தால் அழிக்க முடியாத இயேசுவின் உபதேசங்கள்

உலகத்தில் எத்தனையோ மதங்களும், சன்மார்க்க நெறிகளும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அவைகளில் சில தோன்றினதும் தெரிவதில்லை. மறைவதும் தெரிவதில்லை; ஆனால் இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்துக்கு மானிடனாக வந்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அவர் உபதேசித்த உயர்ந்த நெறிகள் இன்னும் தொடர்ந்து உலகம் எங்கும் பரவிக்கொண்டேயிருக்கின்றன என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

பாலஸ்தீனா என்ற ஒரு குட்டி நாட்டின் எங்கோ ஒரு மூலையில் உள்ள குக்கிராமத்தில் வாழ்ந்த கல்வி அறிவை முறையாகப் பெறுவதற்கு வாய்ப்பற்ற ஒரு ஏழைத் தச்சனின் வளர்ப்பு மகனால் உபதேசிக்கப்பட்ட சன்மார்க்க நெறிகள்-பல துறைகளிலும் மின்னல் வேகத்தில் வளர்ந்து கொண்டு வரும் இந்த விஞ்ஞான உலகத்துக்கு எவ்வாறு பொருந்தும் என்று சிலர் வியக்கின்றனர்.

வேறு சிலர் இயேசு கிறிஸ்து அந்நாளில் பிரபலமாயிருந்த ரோமாபுரி, அலெக்ஸாண்டிரியா போன்ற மாநகரங்களுக்குச் சென்று 'அங்குள்ள மக்களின் நாகரீகம், கலாச்சாரம் போன்றவைகளை ஆராய்ந்து அறிந்திருக்கிறாரா? நூற்றாண்டுக்கு நூற்றாண்டு முன்னேறிக் கொண்டு வரும் நாகரீகத்தின் வளர்ச்சியைக் கோடிட்டு காட்டும் கலாச்சார மறுமலர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, தொழில் புரட்சி, அணு ஆயுத உற்பத்தியால் உணர்வுகளில் காணப்படும் விபரீதப் போக்கு

ஆகியவைகளைப் பற்றியும் அந்த வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கான விதிமுறைகளையும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒருவருக்கு எப்படிக் கூற முடியும்? இயேசுவுக்கு தொலைபேசியின் மேன்மை தெரியுமா? அவர் காலத்தில் வானொலிப் பெட்டிகளும், தொலைக்காட்சி சாதனங்களும் கிடையாதே. போகட்டும் விமானத்திலாவது பறந்திருப்பாரா? கம்ப்யூட்டர் பற்றிக் கேள்விப்பட்டாவது இருப்பாரா? இதெல்லாம் சுத்தப் பத்தாம் பசலித்தனம், காலத்தைக் கணிக்கத் தெரியாதவர்களின் பேத்தல் என்று ஏளனம் செய்யும் இளைஞர்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிவருவதைப் பார்க்கிறோம்.

ஆனால் வேதாகமம், தற்காலத்தில் மனித சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் எண்ணப் பேரலைகளால் ஏற்படும் எல்லாவிதமான விபரீதப் போக்கைப் பற்றி முன்னரே அறிவித்தும், அதற்கான தீர்வுகளை முன்கூட்டியே எழுதியும் வைத்திருக்கிறது என்பதை அறியும்போது யாவரும் வியப்பில் ஆழ்ந்து பிரமிப்படைகிறோம் ஆம். இயேசு கிறிஸ்துவின் உபதேசங்கள் காலத்தால் அழிக்கப்பட முடியாதவைகள். மாந்தினம் உள்ளளவும் அவருடைய உபதேசத்தின் வலிமை குன்றாது; குறையாது அது மனித குலத்தின் அனைத்துப் பிரச்சனைக்கும் எல்லா காலத்துக்கும் ஏற்ற மாமருந்து. ஏனெனில் மனிதன் தன் சிந்தனைப் போக்குக்கும், எண்ண அலைகளுக்கும் பலவிதமான சித்தாந்த சாயங்களைப் பூசி நிறத்தை மாற்றிச் செப்படி வித்தை செய்தாலும் அதன் அடிப்படைத் தன்மை மாறாமலும் மாற்றப்படாமலும் இருப்பதே அதற்குக் காரணம்.

மனித உள்ளத்தின் ஆழத்தில் துளிர்விட்டுக் கிளம்பும் ஆசைகள் மேலெழுந்த வாரியாக-புண்ணுக்குப் புனுகு பூசும் மேற்பூச்சு வேலைகளால் பாதிக்கப்படுவதில்லை. இயேசுவின் போதனைகளோ அவற்றையெல்லாம் கடந்து மனிதனின் உள் மனதிற்கே நேராய் ஊடுருவிச்சென்று பிரச்சினையின் ஆணிவேரைத் தொடுகிறது. ஆகையால் அது எளிய மக்களிடத்தில் ஏதோ ஒரு மூலையில் ஒரு கல்லாத மனுஷனால் பேசப்பட்ட எளிமையான கிராம மொழியாக இருந்த போதிலும் எல்லாத் தரப்பு மக்களுக்கும், எந்நாட்டவர்க்கும், இனத்தாருக்கும் எல்லா காலத்துக்கும் ஏற்புடையதாய் நிலைத்து நிற்கிறது.

நாகரீகத்தின் வளர்ச்சிகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், மருத்துவ முன்னேற்றம் ஆகியவைகள் மனித வாழ்க்கையில் சில சுகங்களையும், சௌகரியங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது மெய்தான், ஆனால் அவைகள் மனிதனின் உள் உணர்வுகளைத் தொட முடியவில்லை.

ஒரு காலத்தில் கட்டை வண்டியில் பயணம் செய்த மனிதன் இன்றைக்கு விமானத்தில் பறக்கும் நிலைக்கு வந்து விட்டான். விபத்துக்களும் நடக்கின்றன. ஆனால் அது மனிதனின் பயணம் ஆசையைக்

கொன்றுவிடவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் கூடாரத்தில் வாழ்ந்த நாடோடி மக்களில் ஒருவருக்கு ஒரு குழந்தை பிறந்தால் அப் பெற்றோருக்கு அது எவ்வளவு மகிழ்ச்சியைத் தருமோ அதே மாதிரி மகிழ்ச்சி தான் இன்றைக்கு நவநாகரீகமான வசதி மிகுந்த செல்வந்தன் வீட்டில் ஒரு குழந்தை பிறந்தாலும் ஏற்படுகிறது. தற்கால அணு ஆயுத யுகத்தில் ஒரு போர்க்களத்தில் மாண்டுபோன ஒரு அன்பு மகனின் சாவுச் செய்தி எப்படிப் பெற்றோருக்கு துக்கத்தைக் கொடுக்குமோ அதே போன்று தான் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் மாண்டு-போன தன் மகன் அப்சலோமின் மரணச் செய்தி தாவீது அரசனுக்கு அறிவிக்கப்பட்டபோது துக்கப்பட்டான். முன்னது தந்தி மூலமோ அல்லது டெலக்ஸ் மூலமோ அனுப்பப்பட்டிருக்கலாம். தாவீதுக்கோ விரைவாய் ஓடிவந்த ஒரு போர் வீரன் மூலமாகக் கிடைத்தது. அவ்வளவு தான் வித்தியாசம். துக்கம் என்று பார்க்கும்போது இருவருக்கும் ஒருவிதமான உணர்வுதான் இருந்திருக்க முடியும்.

சுமார் மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ரெபெக்காளை மனைவியாகப் பெற்றபொழுது ஈசாக்குக்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமோ அதே போன்ற மகிழ்ச்சி தான் தற்காலத்து மணவாளனுக்கும் தன் மனைவியை அடையும்போதும் ஏற்படும். ரெபெக்காள் ஒட்டகத்தின் மேல் ஏறிக்கொண்டு வந்தாள். தற்காலத்து மணப்பெண் ஒருவேளை மாருதிக் காரில் வந்திறங்கியிருக்கலாம். ஆனால் மணக்கோலத்தில் மணமக்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியில் வித்தியாச மில்லை.

புராண காலங்களில் சோமரசம் என்ற ஒருவகையான மதுவை அருந்திய மனிதன் குடிபோதையில் நினைவு தடுமாறிச் செயல்பட்டதால் குடும்பத்துக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டிருக்குமோ அதே பாதிப்பு-தான் வானளாவிய நவநாகரீக ஹோட்டல்களில் விலை உயர்ந்த வெளிநாட்டு மதுவகைகளை அருந்துகிறவனுடைய குடும்பமும் அல்லல் படும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விதமாய் மாற்றப்படாத மனித சுபாவத்தைக் கண்ட இயேசு, உள்ளமுருகி, மனித இயல்பு-களின் அடிப்படையை மாற்றுவதற்குத் தேவையான தெளிவான உபதேசங்களைக் கொடுத்தார். அவைகள் நிறம், ஜாதி, மொழி, கலாச்சாரம், சீதோஷ்ண நிலை என்ற எல்லைகளைக் கடந்து எங்கும், எல்லா காலத்துக்கும் பொருத்தமாக இருக்கின்றன. இன்றைக்கு மட்டுமல்ல; அது மனித சமுதாயம் உள்ளவரை தொடர்ந்து அப்படியே இருக்கும். வானமும் பூமியும் ஒழிந்து போகும். என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்று அவரே கூறியிருக்கிறார். மாற்கு 13:31.

E. Z. செல்வநாயகம்

# சாத்தான் ஜாக்கிரதை!

சாத்தான் சாகவில்லை, நலமாக உயிரோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறான். இந்த உலகத்தில் அவன் இல்லாத இடமே இல்லை. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" என்று அப்போஸ்தலன் பேதுரு கூறுகிறார். (1 பேது 5:8) அவர் சுட்டிக் காட்டுகிற சில காரியங்களைக் கவனியுங்கள்.

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் அதாவது உஷாராக இருங்கள். நீங்கள் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் கவனித்து எடுத்து வையுங்கள். உங்கள் கண்கள் திறந்திருக்கட்டும். எதைச் செய்தாலும், பேசினாலும் நன்றாகச் சிந்தித்துச் செயல்படுங்கள்.

2. உங்களுக்குப் பிசாசு என்கிற ஒரு பகைஞன் இருக்கிறான் என்பது நினைவிருக்கட்டும். அது உனக்குப் புரிந்திருந்தாலும் புரிந்திராவிட்டாலும் அவன் எதிரி என்பது முழுஉண்மை. அவன் உன்னை அழித்து விடப் புறப்பட்டுவிட்டான். நீ உஷாராக இல்லாவிட்டால் அவன் உன்னை அழிப்பது உறுதி.

3. அவன் சிங்கத்தைப் போல கர்ஜிக்கிறான். அவன் சிங்கம் அல்ல. ஆனால் சிங்கத்திற்குரிய சில குணாதிசயங்கள் உள்ளவன். அவன் பலமுள்ளவன். அபாயகரமானவன். துஷ்டன். நல்லவனைப்போலிருக்கும் பரம சண்டாளன். அவன் பதுங்கிப் பாசாங்கு செய்வதெல்லாம் உன்னை விழுங்குவதற்குத் தான்.

4. அவன் சுற்றித் திரிகிறான். அதாவது அவன் ஒரே நிலையில் இருப்பதில்லை. உன்னிடமிருந்து அவன் போய்விட்டான். இனி வரமாட்டான் என்று எண்ணி ஏமாந்துபோக வேண்டாம். அவன் மீண்டும் வருவான் அவன் என்றைக்காவது ஒரு நாளில் உன்னைச் சாப்பிடும் வரைக்கும் ஓயமாட்டான்.

5. அவன் யாரை விழுங்கலாமோ என்று தேடித்திரிகிறான். அவன் கடுமையான உழைப்பாளி. தோல்வியைக் கண்டு துவண்டு போவதில்லை. அவன், சதா எவன் அகப்படுவான் என்று தேடிக்கொண்டே அலைகிறான். அடுத்த பலி நீயாக இருக்கக் கூடாதா? என்பதே அவன் ஏக்கம்.

நீங்கள் எப்பொழுதாவது ஆப்பிரிக்காவின் அடர்ந்த காடுகளை சினிமாவிலோ அல்லது தொலைக் காட்சியிலோ பார்த்திருக்கிறீர்களா? அந்த அடர்ந்த காட்டுக்குள் ஆயிரக்கணக்கான, விதவிதமான சின்னதும் பெரியதுமான மிருகங்கள் நடமாடுவதைக் கவனிக்கலாம். அவை

களில், சில அபாயகரமானவைகளும், கொடியவைகளுமாக இருந்த போதிலும் அவைகள் எல்லாம் ஒருமித்தே வாழுகின்றன. அவைகளில் சில தாவர பட்சிணிகள், சில மாமிச பட்சிணிகள், சிங்கம், புலி, சிறுத்தை போன்ற மிருகங்கள் எவ்வித கவலையுமின்றி நடமாடும். ஏனெனில் அவைகள் பலம்பொருந்தியவைகள், அவைகளுக்குரிய ஆகாரம் அங்கேயே இருக்கின்றன. அவைகள் தேவைப்படுகிற பொழுது பாய்ந்து பிடித்து உண்ணவேண்டியது தான். மற்ற சிறிய மிருகங்கள் பயத்தோடு அடிக்கடி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே புல் மேயும். ஏனெனில் எந்த சமயத்திலும் அவைகள் எதிரிகளால் தாக்கப்பட்டு இரையாக்கப்படலாம். தங்களைக் காப்பாற்றிக் கொள்வதோடு தங்களுடைய இளங் குட்டிகளையும் கூட அவைகள் பாதுகாக்க வேண்டியிருப்பதால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கும். இடையிடையே காதுகளைத் தீட்டிக்கொண்டு பார்வையைத் தீட்சண்யப்படுத்தி கவனிக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் பலமுள்ள மிருகங்கள் இளங் குட்டிகளையும், நடக்க முடியாத நிலையில் இருக்கிறவைகளையும் மந்தையை விட்டு சற்று விலகித் தனித்திருக்கிறவைகளையும் சமயம் பார்த்து தனக்கு இரையாக்கிக் கொள்ளுகின்றன, அவைகள் பலவீனமானவைகளின் மீது பாய்ந்து, குட்டிகளையும், நோய்வாய்ப்பட்டவைகளையும் ஏன் நன்கு வளர்ந்து விட்டவைகளைக் கூட துரத்திப் பிடித்து அவைகளை அடித்துப் புசித்து வருகின்றன. இப்படிப்பட்ட காட்சிகள் பார்ப்பதற்கு அருவருப்பாயும், நினைப்பதற்கே கஷ்டமாகவும் இருக்கிறது. இருப்பினும் இந்த விதமான ஜீவ மரணப் போராட்டங்கள் வன உலகில் தினமும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

நண்பர்களே, மனிதர்களாகிய நாமும் இவ்விதமான ஜீவமரண போராட்டங்களை தினமும் சந்திக்கிறோம். பிசாசு பல வழிகளிலும் நம்மை மோசம் போக்குகின்றான். சாத்தான் கர்ச்சிக்கிற சிங்கம் போல இரையைத் தேடி அலைகிறான். சில வேளைகளில் அதை எளிதில் பார்த்து புரிந்துகொள்ள முடியும். சில வேளையில் தந்திரமாக நற்பணிகள், மதம் என்ற போர்வைக்குள் கூட மறைந்து கொண்டு ஏமாற்றுவான். அவனுடைய தந்திரங்களை அறியாமல் மாட்டிக் கொள்பவர்கள் பலர். அவர்கள் சில விஷயங்களில் உஷாராயிருப்பார்கள், பல சமயங்களில் ஏமாந்து போய் விடுவார்கள். பெருங் கூட்டமாக பெரிய பெரிய புள்ளிகள் எல்லாம் நம்முடைய கூட்டத்தில் இருக்கிறார்கள். சாத்தான் நம்மை என்ன செய்து விடுவான் என்று சிலர் இறுமாந்திருப்பர். திரளான மக்களைப் பின் பற்றித்தானே நாம் போய்க் கொண்டிருக்கிறோம். அவ்வளவு பேருமா தவறு செய்வார்கள் என்ற எண்ணத்தில் சிலர் மெத்தனமாக இருப்பர். இன்னும் சிலர் இளைஞர்களாகவும், விசுவாசத்தில் பலவீனர்களாகவும், ஆன்மா வியாதியுள்ளவர்களாகவும் இருப்பர். அப்படிப்பட்ட நபர்களைக் கண்ணி வைத்து தனக்கு இரை ஆக்கிக் கொள்வான்.

இவைகளெல்லாம், சாத்தானை அருகில் நெருங்க விடாமல் நாம் உஷாராக இருக்க வேண்டும் என்று நம்மை எச்சரிக்கிற சம்பவங்களாய் இருக்கின்றன. அவன் நமக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டான். நாம் ஜாக்கிரதையாக இருந்தால் அவன் எப்படி நம்மை மோசம் போக்க முடியும் என்று விளையாட்டுத் தனமாக நினைத்துக் கொண்டு அவனோடு சாகவாசம் வைத்துக் கொள்ளவே கூடாது. சாத்தான் எந்த ரூபத்தில் வந்தாலும் அவனுடைய நோக்கம் நம்மைக் கெடுத்து அழிப்பதுதானே அல்லாமல் அவனால் ஒரு போதும் நன்மையே கிடையாது. அவன் நம்முடைய இவ்வுலக வாழ்வில் நஷ்டத்தையும் கெடுதலையும் அழிவையும் உண்டு பண்ணுகிறவனாயிருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் அவன் அதோடு திருப்தியடையாமல் ஆவிக்குரிய வாழ்வையும் நாசப்படுத்தி நித்தியத்தையும் இழக்கச் செய்து விட வேண்டும் என்ற கெட்ட எண்ணக்காரன்; ஜென்ம விரோதி.

காரியங்கள் இப்படி இருக்கிறபடியால் நாம் ஆழமாய் சிந்தித்து ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற எச்சரிப்பை அசட்டை செய்யக் கூடாது. சாத்தான் நம்மை மோசம் போக்கும் ஆற்றல் படைத்தவன்தான். ஆனால் தேவ ஒத்தாசையைக் கொண்டு அதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியும். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் அவர் நம்மோடு கூட இருந்து சாத்தானையும் அவனுடைய சோதனைகளையும் வெல்வதற்கு ஒத்தாசை செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். மாற்கு 16:16; மத் 28:20; 1 கொரி 10:13 மேலும் கர்த்தர் அவருடைய பிள்ளைகளுக்கு சாத்தானுடைய சோதனைகளில் அகப்படாதிருக்க பலவிதமான வசதிகளை செய்து கொடுத்திருக்கிறார். அவர் தமது வார்த்தைகளடங்கிய வேதாகமத்தைக் கொடுத்திருக்கிறார். அவரை நோக்கிக் கூப்பிடும் போது செவி கொடுத்து பதில் அளிப்பதாகசொல்லியிருக்கிறார். நம்மை உற்சாகப் படுத்தி ஊக்குவிப்பதற்காக உலகெங்கும் அநேக சகோதர சகோதரிசளை கொடுத்திருக்கிறார். எபி 4:12; 1 யோவான் 5:16 கலா 3:26, 27

ஆகவே சகோதரர்களே, சாத்தானிடம் கவனமாய் இருங்கள். வாழ்க்கையில் அசதியாய் இருந்து சாத்தானிடம் நெருங்கித் தொடர்பு கொள்ளாதீர்கள். அவனிடத்திலிருந்து ஒதுங்கியே இருங்கள். அவனிடத்திலிருந்து உங்களைக் காத்துக் கொள்வதற்கு எல்லாவிதமான முன்னெச்சரிப்பையும் மேற்கொள்ளுங்கள். சாத்தான் நம்மை ஆட்கொண்டு நம்மை சீரழித்துப் போடுவானானால் நாம் மற்றவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. நாமேதான் அதற்குப் பொறுப்பு, ஏனெனில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டிருக்கிறோம், நாம் புத்திசாலிகளாக இருந்தால் எச்சரிப்புகளைக் கவனித்து பொல்லாப்புக்கு விலகியிருப்போம்.

J. C. சோட்

# சத்தியத்தையும் அறியுங்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதில் இவ்வளவு அக்கறை இன்மை ஏன்?

ஒரு காலத்தில் பரிசுத்த வேதாகமம் மக்களுக்கு எளிதில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லாதிருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறி விட்டது. பரிசுத்த வேதாகமம் அதே அளவில் இருக்கிற ஏனைய நூல்களைக் காட்டிலும் குறைவான விலைக்கு எளிதாகக் கிடைக்கின்றன. ஆனால் மக்களிடம் ஆர்வம் தான் குறைவாக இருக்கின்றன. 'பிரசங்கிமார்களும், போதகர்களும், ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களும் ஏதோ தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக படித்துத் தான் ஆக வேண்டும் என்ற ஒரு நிலை இருப்பதால் படிக்கிறார்கள். மற்றபடி உற்சாகமுள்ள ஊழியக்காரர் எவரேனும் வீடு தேடி வந்து வேதம் வாசிக்கலாம், ஜெபிக்கலாம் என்றால் எங்கோ தூசி படிந்து கிடக்கும் வேதாகமத்தைத் தேடிப் பிடித்துத் திறந்து பார்ப்பார்கள். இன்னும் சில பேர் உடல் நலக் குறைவு ஏற்பட்டால், தலைமாட்டில் பரிசுத்த வேதாகமத்தை வைத்துக் கொண்டால் பிணி நீங்கும், பிசாசு பிடித்திருந்தாலும் கூட ஓடிப் போய் விடும் என மூடத்தனமாக நம்பிக் கொண்டு வேதாமகத்தைத் தவறாக உபயோகிக்கிறார்கள்' என்று ஒருவர் கூறினார். அவர் சொல்வதில் உண்மையில்லாமல் இல்லை. பொதுவாக கிறிஸ்தவ மக்கள் மத்தியில் காணப்படுகிற இந்த மந்த நிலையைப் போக்கி வேதாகமம் நம்முடைய வாழ்க்கைப் பிரச்சனைகள் அனைத்துக்கும் வழி காட்டும் உத்தம நெறிகள் அடங்கிய சிறந்த அறிவுப் பெட்டகம் என்பதை உணர்த்தவும், அதைப் படிக்க வேண்டும், தியானிக்க வேண்டும் என்னும் ஆவலைத் தூண்ட வேண்டும் என்ற பேரவாவின் காரணமாக இந்த கட்டுரையை எழுத முடிவு செய்தேன்.

பெரும்பான்மையோர் ஏன் வேதாகமத்தைப் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்ற கேள்விக்கு அநேக காரணங்களைச் சொல்லுகிறார்கள்.

1. தங்களுக்குப் பரிசுத்த வேதமத்தைப் புரிந்து கொள்வதற்கு போதிய ஞானம் இல்லை—இது மாயமான தாழ்மை.

2. வேதாகமத்தைப் படிப்பதற்காக நாம் செலவழிக்கும் நேரம் வீண் அந்த அருமையான நேரத்தில் ஏதாவது வாழ்க்கைக்குப் பயனுள்ள எதையாவது செய்தால் நல்ல பயன்கள் விளையும். இது அறியாமை

3. போதிய நேரம் கிடைப்பதில்லை:—
இது வேதாகமத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளாத பேதமை. நன்றாக ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் இவைகள் எல்லாம் உண்மையான காரணங்கள் அல்ல என்பது விளங்கும்,

வேதாகமத்தைப் புரிந்து கொள்வதற்குப் போதிய ஞானம் இல்லை என்பது உண்மைக் கூற்றன்று. விஞ்ஞானம், கணிதம், பொறியியல் போன்ற கலைகளைக் கற்றுக் கொள்வதற்கு நமக்கு ஞானம் இருக்கிறது என்றால், அதே அளவு ஞானம் வேதாகமத்தைக் கற்றுக் கொள்வதற்கும் போதும். வேதாகமத்தைத் தியானத்துடன் படிப்பது உண்மையான மகிழ்ச்சிக்கும், நிம்மதிக்கும், மனச் சாந்திக்கும் திறவுகோல் ஆகும். இதைப் புரிந்து கொண்டவர்கள் வேதாகமத்தைப் படிப்பது தேவையற்றது, பயன் இல்லை என்றெல்லாம் கூறமாட்டார்கள். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ''ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்''. உபா 8:3 என்றும் அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத் தக்கதும், தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.'' சங் 19:10. என்றும் அனுபவித்து உணர்ந்து பக்தர்கள் எழுதி வைத்தது பொய்யாகுமா? இந்த உண்மையை தங்கள் வாழ்க்கையில் அனுபவித்துத் தெரிந்து கொண்டவர்களுக்கு, அன்றாடம் புதிய செய்திகளைத் தாங்கி வருகிறது என்று மக்கள் கருதுகிற செய்தித்தாளைக் காட்டிலும் ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாகவும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எதை மறந்தாலும் வேத வாசிப்பை மறக்க முடியவில்லை என்று இயம்பத் தக்க அளவுக்கு அத்தியாவசியமானது ஆகவும் மாறி விடும் என்பதற்கு ஐயமில்லை.

வேதாகமம் மற்ற நூல்களைப் படித்துப் புரிந்து கொள்வதை விடச் சற்றுக் கடினம் என்பது உண்மையே—காரணம் உண்டு.

''புரிந்து கொள்ளுவதற்குக் கடினமானவை சில அவருடைய கடிதங்களில் உள்ளன. அறியாதவர்களும், உறுதியற்றவர்களும் மறை நூலின் மற்றப் பகுதிகளுக்குப் பொருள் திரித்துக் கூறுவது போல் இவற்றிற்கும் கூறுகின்றனர்''. 1 பேதுரு 3:16 (திருத்திய மொழி பெயர்ப்பு) என்று பவுலார் தரும் சில தத்துவ விளக்கங்களைக் குறித்துக் பேதுரு அப்போஸ்தலன் கூறுகிறார். ஒன்றை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அதென்னவெனில் வேதாகமம் கூறுகின்ற காரியங்கள், விபரங்கள், நிகழ்ச்சிகள் யாவும் இறைவன் மனிதனுக்கு வெளிப்படுத்திய பல்வேறு இரகசியங்கள் நிறைந்த தத்துவப் பெட்டகம். இறை மாட்சி மெய்ஞ்ஞானம், வல்லமை, தூய்மை, நீதி, அன்பு ஆகியவைகளின் உறைவிடமான இறைவன், சிறுமதி படைத்த—கேவலம் ஒரு புழுவுக்கு ஒப்பான மானிட பிறவிக்கு வெளிப்படுத்தின தெய்-

விதச் சட்டங்கள். நெறி பிறழாமல் வெற்றிகரமான வாழ்வு வாழ ஒவ்வொரு மனிதனும் இவைகளை அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்ற பக்தி நிலையோடு அணுக வேண்டும்.

## வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள விரும்புகிற ஒருவனுடைய மனநிலை எப்படி இருக்க வேண்டும்?

*''அறிவு இறுமாப்பை உண்டாக்கும்; அன்போ பக்தி விருத்தி உண்டாக்கும்.'' 1 கொரி 8:1.* ஆனால் வெறும் பக்தியானது மூடநம்பிக்கையை உண்டாக்கி விடும். ஆகவே ஞானம் கலந்த பக்தியுடன் வேதாகமத்தைப் படித்தால் அதன் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ள முடியும். அநேகர் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பிக்கும் போதே தாங்கள் தங்கள் பெற்றோர்கள் மூலமாகவோ, நண்பர்கள் மூலமாகவோ, ஊழியர்கள் மூலமாகவோ ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கின்ற பல கருத்துகள், அபிப்பிராயங்கள், நம்பிக்கைகளுக்கு ஆதாரம் தேடும் கண்ணோட்டத்தில் படிப்பார்கள். அது தவறான அணுகு முறையாகும். *சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்பது வேதமொழி. (யோவான் 8:32)* ஆகவே மேற்கூறிய தவறான அணுகுமுறைகளை விடுத்து திறந்த மனதுடன் உண்மையைக் கண்டு பிடித்து அதன் வழியே செல்ல வேண்டும் என்னும் பேரவாவினால் உந்தப்பட்டவர்களாக நாம் வேதாகமத்தைப் படித்தால் சிறந்த பலன் கிட்டும். பெரோயா பட்டணத்தார் தெசலோனிக்கே பட்டணத்தாரை விட நற்குணசாலிகள் என்று வேதாகமம் கூறுகிறதே ஏன் தெரியுமா? *''அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா? என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்'' (அப் 17:11)*

எடுத்துக் காட்டாக சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருக்கிற ஒரு பொறியாளரையும், பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிற ஒரு பொறியாளரையும் எடுத்துக் கொள்ளுவோம். *சுரங்கப் பொறியாளர் உலோகங்கள் எங்கு படிந்திருக்கிறது? ஆழத்திலா பக்கவாட்டிலா? குறுகிய இடுக்கமான பள்ளத்தாக்கிலா, கோணலான தும் ஒழுங்கீனமான உருவத்திலா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் கனிவளம் எங்கு இருக்கிறதோ அதற்கேற்றவாறு வெட்ட வேண்டிய இடத்தில் வெட்டி குடைந்து செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் குடைந்து, இப்படி நிலைமைக்கு ஏற்ப செயல்படுவார் ஆனால் பாதை அமைக்கும் பொறியாளர் நிலை அப்படியன்று. தான் பாதை அமைக்க வேண்டிய நிலப்பகுதிகளை முன்னமே தீர்மானித்துக் குறித்துக் கொள்வார். பின்னர் அந்தப் பகுதியில் இருக்கிற பள்ளங்களைத் தூர்த்து நிரப்புவார். மேடான பகுதிகளை வெட்டிச் சரித்து*

விடுவார். பாறைகள் இருந்தால் வெடி வைத்துத் தகர்த்தெறிவார். இப்படி என்னென்ன செய்தால் பாதை செவ்வையாய் அமையுமோ அத்தனையும் செய்வார். நாம் சுரங்கப் பொறியாளரைப் போன்று வேதாகமத்தை வாசித்து அதற்குள்ளே புதைந்து கிடக்கும் ஞானச் செல்வங்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். பாதைப் பொறியாளரைப் போன்று நமது கருத்துகளுக்கு ஆதாரங்கள் தேடிக் கொண்டு தேவனுடைய வார்த்தைகளைப் புரட்டியும், திரித்துக் கூறியும், மாற்றங்கள் செய்தும் தேவனுடைய திட்டத்தை நம்முடைய எண்ணங்களுக்கு இசைவாக திசை திருப்பக் கூடாது. வெளி 22:18,19 ஒவ்வொரு மனிதனும் எல்லாவற்றையும் அவனவனே சீர் தூக்கிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறான். மனிதன் தன்னுடைய உடல் நலத்துக்கும், ஆரோக்யமான வாழ்வுக்கும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள ஓயாமல் முயற்சி செய்து கொண்டேயிருக்கிறான். ஆனால் அதை விட முக்கியமானதும், அழியாததும் என்று கருதப்படும் ஆன்மீக காரியங்களில் சிந்தனையைச் செலுத்துபவர்களுடைய எண்ணிக்கை வெகு வெகு சொற்பமே. மற்றவர்கள் தங்களுக்காகப் படித்து, சிந்தனை செய்து, சில கோட்பாடுகளை வகுத்துக் கொடுக்கட்டும், நாம் அதைப் பின் பற்றுவோம் என்று தங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க மக்கள் நினைக்கின்றனர். எள்ளளவும் கல்வி அறிவில்லாத ஒரு மனிதன் தன்னிடத்தில் உள்ள பணத்தை விபரம் தெரிந்த ஒரு மனிதனிடம் கொடுத்து விட்டு, எனக்கு உணவும் உடையும், உறைவிடமும் கொடுத்தால் போதும்; எனக்குக் கணக்கு ஒன்றும் தெரியாது என்று கூறுவதை நாம் காண்பது அரிது.

ஆனால் ஆன்மீகக் காரியங்களில் இதை மிகச் சாதாரணமாகச் செய்து கொண்டு வருகிறார்கள். இது விஷயத்தில் எனக்கு அதிக ஞானம் இல்லை. எங்கள் போதகர் சொல்லுகிறதை நான் ஆமோதிக்கிறேன், தலைமைக் குருவும் அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறு குழுவும் தீர்மானித்ததை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.'' என்றெல்லாம் கூறுவோர் அநேகரை நாம் எளிதில் காணமுடியும். உண்மையாகவே ஆத்துமா அழியாதது, உடலை விட உள்ளம் முக்கியமானது என்பதை நாம் விசுவாசித்து ஒப்புக் கொண்டு செயல் பட்டால் இந்த அவல நிலை நீடிக்காது. அரிசியைக் குப்பையிலே கொட்டி விட்டு உமியைப் பத்திரப்படுத்துகிறவனை நாம் எள்ளி நகையாடுகிறோம். ஆனால் சாவாமையுள்ள ஆத்துமாவை அலட்சியப் படுத்திவிட்டு என்றைக் காவது ஒரு நாள் அழிந்து போகிற சரீரத்தைப் போற்றிப் பாதுகாக்கிற மக்களாக இருப்பதில் நமக்கு வெட்கமுமில்லை வேதனையுமில்லை. ஏன் இந்த இழி நிலை? அறியாமைதான். இந்த அறியாமை என்னும் இருள் அகற்றப்படுவது மிக மிக அவசியம். 2 கொரி 4:4 அதற்கு வேதம் என்னும் வெளிச்சம் அவசியம். எபே 1:19. ஒவ்வொரு மனிதனும் தானாய்ச் சிந்தித்து முடிவு எடுக்கும் பொறுப்பை நம் ஒவ்வொருவர் மேலும் சுமத்தியிருக்கிறார்.

"ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பான்" ரோமர் 14:12 "ஒவ்வொருவனும்" "தன்னை" என்பன போன்ற ஒருமையைக் கவனியுங்கள். கூட்டாக அல்ல; குடும்பமாக அல்ல; சபையாக அல்ல; சபைகளின் ஒன்றியங்களாக அல்ல; தனி மனிதன். ஆகவே போக்குச் சொல்ல இடமே இல்லை. அதே போன்று "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது, தக்க பலனை அடையும்படிக்கு நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். 2 கொரி 5:10. என்கிற வசனப்பகுதியிலும் அவனவன் என்ற சொல்லில் உள்ள ஒருமையைக் கவனிக்கவும். ஆகவே ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே பொறுப்பு என்பதையும் மற்றவர்கள் மீது பழியைப் போட்டு விட்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதையும் தெளிவாகக் கூறியிருக்கிறார். இவ்வளவுக்கும் பிறகு நாம் தேவனுடைய திட்டத்தை அறிந்து கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்து விட்டு நியாயத் தீர்ப்பு நாளிலே என்ன பதில் கூறப் போகிறோம்? பிரசங்கி 12:13, 14

S. ராஜநாயகம்

## ஆலயம் செல்வோருக்கு அறிவுரை

நீ தேவாலயத்திற்குப் போகும் போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோல பலியிடுவதைப் பார்க்கிலும் செவி கொடுக்கச் சேர்வதே நலம்.

தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்தில் இருக்கிறார், நீ பூமியில் இருக்கிறாய்; ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.

நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக் கொண்டால் அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்துகொண்டதைச் செய். நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். தான தர்மம் செய்யும்போது தாரை, தப்பட்டை, ஊதுவியாதே (விளம்பரம் தேடாதே) உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது.

நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்வதற்கு முன்னமே உங்கள் தேவைகளை அவர் அறிந்திருக்கிறார்.

# பிசாசைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

இன்றைக்கு மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சைக்குரிய விஷயமாகப் பேசிக் கொள்ளப்படுவது பிசாசு பற்றிய காரியம் தான். பேயோட்டும் இயக்கத்தைச் சேர்ந்த மதவாதிகள், மர்ம நாவல்கள் மற்றும் மயிர்க் கூச்செறியும் படத்தயாரிப்பாளர்கள் போன்றோர் இதைப்பற்றி பெரிய அளவு விளம்பரம் கொடுத்து மக்கள் மனதில் பீதி உண்டாக்குகிறார்கள். இவைகளைக் கேள்விப்படுகிற மக்கள் மனதில் "பிசாசுப் பிடி" 'பேய் ஓட்டுதல்' அசுத்த 'ஆவியின் அட்டகாசம்' போன்ற காரியங்களில் குழப்பமடைந்து காணப்படுகின்றனர்.

1. பிசாசு பற்றிய உண்மை தான் என்ன?
2. வேதாகமத்திலேயே சொல்லப்பட்டிருக்கிற இவைகள் என்ன?
3. அவைகள் எங்கிருந்து வந்தன?
4. அவைகளின் சக்திதான் என்ன?
5. ஏன் குறிப்பிட்ட சிலரை மட்டும் பிடிக்கிறது; மற்றவர்களிடம் வருவதில்லை.
6. தற்காலத்திலும் அது மனிதரைப் பிடித்து ஆட்டுகிறதா?

இப்படிப்பட்ட கேள்விகள் சிந்திக்கிற மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன.

இப்படிப் பட்ட கேள்விகளுக்கு விடை பகரக் கூடிய ஆற்றல் மக்களின் அறியாமையை பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் எழுதப்படும் மட்டரக நூல்கள் அல்லது சினிமா படங்களுக்குக் கிடையா. இதைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் பரிசுத்த வேதாகமம் ஓரளவுக்குத் துணை செய்ய முடியும்.

ஆனாலும் வேதாகமம் பிசாசுகளை ஒரு பொருட்டாக எண்ணி அதைப்பற்றி முறையாக எதுவும் சொல்லுவதில்லை வேதாகமம் எங்கும் கவனமாகத் தேடி வாசித்தாலும் பிசாசு சம்பந்தப்பட்ட விஷயத்தில் இன்னும் பல கேள்விகளுக்குப் பதில் கிடைப்பதில்லை.

பிசாசு சம்பந்தப்பட்ட விஷயத்தைப் புதிய ஏற்பாட்டில் தான் அதிகமாக வாசிக்கிறோம். ஆயினும் மற்ற காரியங்களை விளக்கிச் சொல்வதற்கு பிசாசு பற்றிக் கூற வேண்டிய அவசியம் ஏற்படும் போது எவ்வளவு சுருக்கமாக அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமோ அந்த அளவுக்குச் சொல்லிவிட்டு அமைதியாகி விடுகிறது.

முதலாம் நூற்றாண்டில் பிசாசுகளின் நடமாட்டம் இருந்தது என்பது வரலாற்று உண்மை. பேய்பிடித்தல், சிலவிதமான வியாதிகள் மனிதர்களைப் பாதிக்கச் செய்வது போன்ற காரியங்கள் நடந்-

திருக்கும். என்பதை வேதாகமத்தை நம்புகிறவர்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இல்லாவிடில் புதிய ஏற்பாட்டு சம்பவங்களை நாம் விசுவாசிக்க வில்லை என்று பொருள்படும்.

வேதாகமம்; பிசாசின் தோற்றுவாய் பற்றி தெளிவாக ஒன்றும் சொல்லுவதில்லை, ஆகவே அதைப் பற்றி வேத அறிஞர்களிடையே பலவிதமான முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. அவைகளில் சிலவற்றை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதை சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

ஆதி 1:1 க்கும் 1:2க்கும் இடையில் உள்ள பல ஆண்டுகளின் வரலாறு நமக்குத் தெரியாது என்றும், அந்த கால கட்டத்தில் 'வீழ்த்தப்பட்ட ஆவிகள்' மனித சாயலில் நம்மில் வாழ்ந்தன என்றும் ஒரு சாரார் சாதிக்க முயல்கின்றனர். அப்படியொரு கால கட்டம் இருந்ததாக வேதாகமம் சொல்லுவதில்லை. பின்னே ஏன் அப்படிச் சொல்லுகிறார்கள் என்றால் பரிணாம வளர்ச்சிக் கொள்கைக்காரர்கள் (Evolution Theory) போட்டுக் காட்டும் கணக்கு ஒருவேளை உண்மை-யாக இருந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் அதற்கு இப்படியொரு விளக்கம் கொடுத்து விட்டால் அவர்களை வாயடைத்து விடலாம் என்ற எண்ணத்தில் வந்த குழப்பந்தானே யல்லாமல் இது உண்மையல்ல. ஆதாமை முதல் மனிதன் என்று வேதம் அறுதியிட்டுக் கூறும் போது (1 கொரி 15:45) ஆதாமுக்கு முற்பட்ட சந்ததி ஒன்று இருந்தது என்று ஏற்றுக் கொள்வது எப்படி?

இன்னொரு சாரார் ஜலப்பிரளயத்துக்கு முன்னர், சில மார்க்கம் தப்பிப்போன தூதர்கள் மனித குல ஸ்திரீகளோடு உடல் உறவு கொண்டதால் பிறந்தவைகளே பிசாசுகள் என்று கூறுவர். இது ஆதியாகமம் 6:1-4 வசனங்களில் ''தேவ குமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால் அவர்களுக்குப் பிள்ளைகள் பெற்றபோது'' என்று கூறுகிற வசனங்களை தவறாக புரிந்து கொண்டதின் விளைவாகும். தேவ தூதர்கள் பால் உணர்வு அற்றவர்கள் என்று வேதம் சொல்லு-கிறது மத் 22:30. அப்படியிருக்க அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெறுவது என்பது சாத்தியமன்று. பின் தேவ புத்திரர்கள் என்று குறிப்பிடுவது யாரை? என்ற வினா எழுகிறது. அதற்கு நீதிமானாகிய சேத்துக்குப் பிறந்த சன்மார்க்க புத்திரர்களை தேவ குமாரர் என்று பொருள்கொண்டு துன்மார்க்க சிந்தையுள்ள காயீனின் வம்சா வழியினரை மனுஷ குமாரத்திகள் என்று பொருள் கொள்வது ஏற்புடையதாக இருக்கும்.

இதைப் பற்றி வேறு இரண்டு கருத்துக்களும் உண்டு. அவைகள் ஓரளவு பொருத்தமாக இருக்கலாம் என்று பெரும்பாலோரால் கருதப்படுகிறது 'புகழ்பெற்ற பிரசங்கங்களும்...' என்ற தலைப்பில் திரு. அலெக்-ஸாண்டர்கேம்பெல் என்பவர் கீழ்க் காணும் கருத்தைச் சொல்லுகிறார். பொல்லாதவர்களும் துன்மார்க்கமுமான மனிதர்களின் ஆவியை ஆவி-

யுலகத்திலிருந்து எழுப்பி தன்னுடைய தெய்வீகத் திட்டத்துக்கு ஏற்ற வாறு சில மனிதர்களின் மீது ஏவி விடுகிறார் என்று கூறுகிறார். வேறொரு ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்து யாதெனில், வீழ்ந்துபோன ஆவிகள்-தங்களுடைய வாசஸ்தலத்தை விட்டு வெளியே வந்து உலவ, தேவன் அனுமதித்து தன்னுடைய திட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார் யூதா 6. இக் கருத்தை சார்லஸ் ஹாட்ஜ் என்பவர் 'முறையான தெய்வீகம்' என்னும் நூலில் எழுதியிருக்கிறார்.

பிசாசின் தோற்றத்தைப் பற்றி தெளிவில்லாத ஊகங்கள் பல இருந்தாலும், முதலாம் நூற்றாண்டில் பிசாசுகள் இருந்தன என்பதை புதிய ஏற்பாடு உறுதி செய்கிறது. பிசாசுகள் "ஆவிகள்" என்பது தெரிகிறது மத்தேயு. 8:16-ல் "பிசாசு" "ஆவி" என்னும் பதங்கள் மாறி மாறி உபயோகப்படுத்தப்பட்டிருப்பதைப் பாருங்கள். ஒரு ஒரு ஆவிக்கு மாமிசமும், எலும்புகளும் கிடையாதே என்று இயேசு கூறுகிறார் லூக் 24:39. ஆகவே பிசாசுகள் சரீரமற்ற ஆவிகள் தான் என்பதற்கு ஐயமில்லை. அவர்களுடைய குணநலன்கள் என்ன என்பதைப் பார்க்கும்போது, அவைகள் சுபாவத்தில் தீயவைகள், அசுத்த ஆவிகள் என்னும் பிசாசுகளின் தலைவன் பெயல்செபூல் என்று அழைக்கப்படும் சாத்தானின் தலைமையில் இயங்குபவர்கள் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது (மத் 12:24, 43, 45.)

1. பிசாசுக்கள் புத்திகூர்மையுள்ள அறிவு ஜீவிகள் மாற்கு 1:24

2. அவைகள் விவேகமாக சூழ்நிலையை நாடி பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் உடையவைகள். மத் 12-44,45.

3. பிசாசு பிடிப்பதினால் சரீர வியாதிகளும் மன நோய்களும் கூட ஏற்படலாம் மத் 4:24.

4. சிலரை ஊமையாக்கிவிடும் மத் 9:32. இன்னும் கண்பார்வை யிழக்கச் செய்யும் மத் 12:22; வலிப்புநோய் உண்டாகும் மாற் 9:18; பெண்களுக்குத் தீராத வியாதிகளை உண்டாக்கும் மத் 9;20-22.

5. சில வேளைகளில் அவைகளுக்கு அசாத்தியமான பலம் கூட இருக்கும் மாற்கு 5:4; அப் 19:16.

இவைகள் இருந்தபோதிலும் அவைகள் தேவனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவைகளே. லூக் 10:17 அவைகள் ஏன் அந்த நாள் மனிதர் களுக்குள்ளே பிரவேசிக்கவும் துன்புறுத்தவும் அனுமதிக்கப்பட்டார் கள்? இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்படு வதற்கு அவைகள் தேவனால் அனுமதிக்கபட்டிருக்காலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது, இயேசு இயற்கையின் மேல் அதிகாரம் உள்ள

வர்கள் என்பதைக் காட்டும் வகையில் (மாற் 4:38) உடல் நலப் பிரச்சனைகள் மேல் அதிகாரம் உள்ளவர் என்பதைக் காட்ட (மாற்1:31) உணவு மற்றும் பண்டங்களின் மீது அதிகாரம் உள்ளவர் என்பதைக் காட்ட (யோ 2:9) ஏன் மரணத்தின் மீது கூட அதிகாரம் உள்ளவர் என்பதைக் காட்ட (யோ 11:44)

அசுத்த ஆவிகளின் மீது இயேசு அதிகாரம் செலுத்தியது யூதர் களுக்கு பெரிய வியப்பாக இருந்தது. இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே யென்று வியந்தனர் மாற் 1:27 அது மட்டும் அல்லாது தம்முடைய சீஷர்களுக்கு பிசாசுகளைத் துரத்தும் அதிகாரத்தைக் கொடுத்தார். லூக் 10:17 அவர்களும் அவர்களுடைய விசுவாசக் குறைவினால் ஒரு இடத்தில் மட்டும் தவறிப் போனார்கள்; மற்றபடி அவர்களும் பிசாசுகளைத் துரத்தினர் மாற்கு 9:28; மத் 17:20.

சற்றேறத் தாழ புதிய ஏற்பாட்டில் சுமார் 80 இடங்களில் பிசாசு சம்பந்தப்பட்ட குறிப்புகள் உண்டு. அவைகளைக் கவனமாகத் தொகுத்துப் படித்துப் பார்த்தால் தற்காலத்தில் பிசாசுகளைப் பற்றிய வதந்திகள் யாவும் அபத்தம் என்ற முடிவே ஏற்படும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வசன ஆதாரங்களை வைத்து முதல் நூற்றாண்டுக் காலத்திய பிசாசு பேய் விரட்டலுக்கும் தற்காலத்து பிசாசு துரத்துகிறதாக பெரும் விளம்பரம் செய்கிற நபர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள்.

1. முதல் நூற்றாண்டில் இயேசு அசுத்த ஆவிகளை விரட்டிய சம்பவத்தை பலரும் பார்த்து ஆச்சரியப்பட்டனர் லூக்4:36 ஆனால் தற்காலத்து பிசாசு துரத்துவதாகச் சொல்லுகிறவர்கள். கும்பகோணத்தில் நடந்ததாக குற்றாலத்தில் சொல்லுவார்கள், கோவையில் நடந்ததாக் கொழும்பில் சொல்லுவார்கள். அதற்கு சாட்சிகளுக்கா பஞ்சம்? கொஞ்சம் சில்லறைகள் கை மாறினால் எதையும் சொல்ல ஆட்கள் ஏராளமுள்ள நாடு நம்முடைய நாடு.

2. இயேசுவும் அவர்களுடைய அப்போஸ்தலர்களும் வெறும் வாயால் அதட்ட பிசாசுகள் பயந்து ஓடின. மத் 17:18; அப் 19:12, தற்காலத்தில் எத்தனையோ விநோதமான முறைகள், மேலும் நாட் கணக்கில் ஓட்டினாலும் நகர மறுக்கின்றன.

> ஒரு செத்துப்போன ஈ, பல ரூபாய்களைச் செலவு செய்து பக்குவப் படுத்தப்பட்ட பரிமளத் தைலத்தை துர்நாற்றம் அடையச் செய்து விடும். ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவனை அவனுடைய சொற்ப மதியீன செயல் சமுதாயத்தில் அவனுக்கு இருக்கிற நற்பெயரை கெடுத்து விடும்.

# ஆரோக்கியமான உபதேசம்

ஆரோக்கியமான உபதேசம் என்ற தலைப்பே ஆரோக்கியமில்லாத உபதேசங்களும் இருக்கின்றன என்று கூருமற் கூறுகிறது. ஹீகியாய்னோ, (Hugiaino) என்ற கிரேக்கப் பதத்துக்கு ஆரோக்கியம் என்று பொருள். 'டிடாஸ்கால்லியா' (Didaskalia) என்றால் உபதேசம் என்று பொருள். தீத்து இரண்டாம் அதிகாரம் 1-ம் வசனத்தில் இளம் பிரசங்கியான தீத்துவுக்கு 'ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசு' என்று பவுல் அறிவுரை கூறுகிறார். அதே போன்ற ஒரு அறிவுரையை வேறொரு இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு "நீ கிறிஸ்தேசுவைப் பற்றும், விசுவாசத்தோடும், அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக் கொண்டிரு" என்று விளம்புகிறார். 2 தீமோ 1:13 இவைகளிலிருந்து இறைமக்களாகிய நாம் உபதேச விஷயத்தில் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. அப்படியானால் அந்த ஆரோக்கியமான உபதேசம் என்பது யாது என்பதை நாம் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

முதலாவது ஆரோக்கியமான உபதேசம் என்பது கர்த்தருடைய அனைத்துக் கட்டளைகளையும் கைக்கொள்வதாகும். பிரதான கட்டளையின் முடிவில் "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார். மத் 28:20. மேலும் யோவான் நற்செய்தி நூலில் 'ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்வான்' என்றும் கூறுகிறார். (யோவான் 14:23) வேறொரு சந்தர்ப்பத்தில் 'என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிற தென்ன?' என்று காட்டமாகக் கேட்கிறார். லூக் 6:46. இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது எந்த ஒரு மனிதனும் இயேசு கிறிஸ்துவின் எல்லா உபதேசங்களையும் முழுமையாகக் கைக்கொள்ளாமல் உபதேசத்தில் ஆரோக்கியமாயிருக்க முடியாது. (மத் 7:24-27.)என்பது விளங்கும்

ஆரோக்கியமான உபதேசத்துக்கு, அதை ஏற்றுக் கொள்பவர்களின் வாழ்க்கையில் காணப்படும் கனிகளே சான்று! உதாரணமாக ஆரோக்கியமான உபதேசத்தைக் கைக் கொள்ளும்போது அவர்கள் பாவ வியாதி நீங்குகிறது (யோவான் 8:32 ) அவருடைய சீஷர்களாக் குகிறது (யோவான் 8:31 ) தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்யத் தூண்டுகிறது, (மத் 15:8, 9.)

ஆரோக்கியமான உபதேசம் என்பது சட்டத்தின் முனைமேல் நிற்பதும் அல்ல; அதே சமயத்தில் சட்டத்தை அலட்சியமாய் நினைப்பதும் அல்ல, யோசுவா இஸ்ரவேல் மக்கள் மீது தலைவனுக்கப்பட்ட

நூலில் அவனுக்குச் சொல்லப்பட்ட தேவ ஆலோசனையை வாசித்து நிதானிப்போம். ''என் தாசனுகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலம் கொண்டு திடமானதாயிரு; நீ போகும் இடம் எல்லாம் புத்திமானுய் நடந்து கொள்ளும்படிக்கு அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக'' (யோசுவான் 1:7.) அதன் பொருள் யாதெனில் சட்டத்தின் முனைமேல் நிற்கவும் வேண்டாம்; சட்டத்தை அலட்சியம் செய்யவும் வேண்டாம். சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களின் உட்பொருளைப் புரிந்து கொண்டு கருத்துடன் கைக்கொள் என்பதாகும்.

சிலபேர் சட்டம் சொல்வதற்கு மேல் ஒருபடி அதிகமாகச் செய்வது தனது பக்திக்கு மெருகு ஊட்டும் என்று தவருக நினைத்துக் கொள்கின்றனர் (லூக் 18:12.) அதை வேதம் அங்கீகரிப்பதில்லை. மாருக தேவன் தம்முடைய வார்த்தையோடு எதையும் கூட்டவும் வேண்டாம்; குறைக்கவும் வேண்டாம் என்று தெளிவாகச் சொல்லுகிருர். ''நானு உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனுகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றையும் கூட்டவும் வேண்டாம்; அதில் ஒன்றையும் குறைக்கவும் வேண்டாம்'' (உபா 4:2.) ''அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே; கூட்டினுல் அவர் உன்னைக் கடிந்து கொள்வார், நீ பொய்யனுவாய் (நீதி 30:6)'' இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது; ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினுல், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார்.

''ஒருவன் இந்த தீர்க்க தரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால் ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்'' (வெளி 22:18,19)

இப்படியாக பல சந்தர்ப்பங்களில் தேவன் நம்மை எச்சரித்த பிறகும் கூட தேவனுடைய வசனத்தைக் கூட்டியும், குறைத்தும், திரித்தும் போதித்தாலும், கைக் கொண்டாலும் அது ஆரோக்கியமான உபதேசம் ஆகாது. ''கர்த்தாவே, நீர் சொல்லும் அடியேன் கேட்கிறேன்; நீர் கட்டளையிடும்; கீழ்ப்படிகிறேன்'' என்ற மன நிலையோடும் பயபக்தியோடும் நாம் நடந்து கொள்வதே தேவனுக்குப் பிரியம்.

இறுதியாக ஆரோக்கிய உபதேசம் என்பது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று மகிமைப் படுத்துவதாகும். இயேசு தான் வேதாகமத்தின் கருப்பொருள், அவர் சத்துருவாகிய சாத்தானை

வென்று வாகை சூடுவதைப்பற்றி, ஆதிமனிதன் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்டிருக்கிறது (ஆதி 3:15) பழைய ஏற்பாட்டின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் அவர் பிறப்பு, வாழ்க்கை, பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காணலாம். அவருடைய தயவு, அன்பு, இரக்கம், கிருபை, அவருடைய மீட்புத் தன்மை, அவர் தெய்வீகத் தன்மை ஆகியவைகள் புதிய ஏற்பாட்டில் எங்கும் பரவி வியாபித்திருக்கிறது. அவர் வேதாகமத்தின் முதல் காட்சியிலேயே தோன்றி, வேதாகமத்தின் இறுதிக் காட்சியில் மீண்டும் வருவேன் என்ற வாக்குத்தந்ததோடு விடைபெறுகிறார்.

இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அப்போஸ்தலனாகிய பவுல் 'நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்கு பைத்தியமாயும் இருக்கிறார். கிறிஸ்து தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்' (1 கொரி 1:23, 24) என்கிறார். இக்கருத்தை மீண்டும் உறுதி செய்து கலாத்தியருக்கு எழுதும் போது ''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக'' (கலா 6:14) என்று தீர்மானமாய்க் கூறுகிறார். இப்படியாக **ஆரோக்கிய உபதேசம்** என்பது இயேசுவைக் கிறிஸ்துவும் ஆண்டவரும் (அப் 2:36) என்று உயர்த்திக் காண்பிப்பதாகும். 'இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்' (1 கொரி 2:2) என்கிறார் அப்போஸ்தலன் பவுல். அதைப் பின்பற்றி நாமும் '**வேதம் விளம்புவதை விவரித்துச் சொல்வோம்; வேதம் விளம்பா தவற்றிற்கு உடன் படவே மாட்டோம்**'' என்ற நிலையில் உறுதியாயிருப்போமாக!

— நிக்யுங்க்.

## வாலிபனே அனுபவி, சிந்தி, உணர்!

வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு; உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னை பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட. ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி.

நீ உன் இதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாமிசத்திலிருந்து தீங்கையும் நீக்கிப் போடு; இளவயதும் வாலிபமும் மாயையே. நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை.

# பிரசங்கிமார்களுக்கு பவுல்டியார் கூறும் ஆலோசனைகளும் அறிவுரைகளும்

1. வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்காதிருக்கும்படி கட்டளையிடு 1 தீமோ 1:3

2. தெய்வீக பக்தி விருத்திக்கு உதவாத தர்க்கங்களையும் கட்டுக்கதைகளையும், முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் ஊக்குவிக்கிறவர்களை (ஜாதிச் சாக்கடைக்குள் விழாதபடி) கடிந்து கொள். 1 தீமோ 1:15.

3. சுத்தமான-இருதயம் நல்மனச் சாட்சி-மாயமற்ற விசுவாசம் ஆகியவைகளோடு கூட அன்பும் இருப்பது தான் மெய்க்கிறிஸ்தவம் 1 தீமோ 1:5

4. கிறிஸ்தவ ஜீவியம் ஒரு போராட்டம். ஆக விசுவாசத்தோடும் நல்மனச் சாட்சியோடும் நல்ல போராட்டம் பண்ணு. 1 தீமோ 1:8; 6-12

5. சத்திய வசனங்களை ஐயமறக் கற்று, சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாய் இருக்கிற தேவனுடைய சபையில் அவருடைய பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் போதித்து புத்தி சொல். 1 தீமோ 3:15

6. சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவரச் செய்வது எவ்வாறு என்பதைக் கற்றுக் கொடுப்பது ஒரு சிறந்த ஊழியனுக்குரிய அடையாளம்.

7. கட்டுக் கதைகளை வெறுத்து தேவபக்திக் கேதுவான காரியங்களில் நாட்டம் கொள், 1 தீமோ 4:7

8. சின்னப்பயல், இவன் சொல்லி நாம் தெரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது என்று மற்றவர்கள் உன்னைப் புறக்கணித்து விடாதபடி வார்த்தையிலும், நடத்தையிலும் அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு எடுத்துக் காட்டாக் விளங்கு காட்டு 1 தீமோ 4:12

9. தொடர்ந்து வேதத்தை தியானி. அதன் அடிப்படையில் அறிவுரை கூறு, உபதேசம் பண்ணு. 1 தீமோ 4:13

10. நீ ஊழியக்காரனாய் அழைக்கப்பட்டிருக்கிறாய் இது பெரிய ஆசீர்வாதம். அதை அற்பமாய் நினைக்காதே. இந்த கனமான

பொறுப்பை ஆண்டவருக்குப் பிரியமாய் நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தையோடு நாளுக்கு நாள் முயன்று முன்னேறு. 1 தீமோ 4:14, 15.

11. பிரசங்கிப்பது சுலபம். அதை செயல் படுத்துவது கடினம். யார் ஒருவர் தான் பிரசங்கிப்பதை தன்னுடைய சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறுனே அவன் தான் தன்னையும், தன் உபதேசத்தைக் கேட்கிறவர்களையும் இரட்சிப்படைய உதவமுடியும். 1 தீமோ 4:16

12. சபையில் உள்ள பெரியவர்களைத் தகப்பனைப் ,போலவும் வாலிப சகோதரர்களை சொந்த அண்ணன் தம்பிகளைப் போலவும், வயதான சகோதரிகளைத் தாயைப் போலவும் வாலிப சகோதரிகளை சொந்த அக்காள் தங்கை என்ற மனப்பக்குவத்தோடும் நடத்த வேண்டும். 1 தீமோ 5:1, 2

13. மூத்த சகோதரர்கள் மீது பொறுப்பற்ற முறையில் கூறப்படும் புகார்களை உடனே நம்பாதே. குறைந்த பட்சம் இரண்டு அல்லது மேற்பட்டவர்கள் அந்த ஊர் ஜிதம் செய்கிறுர்களா என்று கவனித்து முடிவெடுக்கவும். 1 தீமோ 5:19

14. தவறு செய்கிறவர்களை சபையார் முன்பாக கண்டித்து உணர்த்து. அது மற்றவர்களுக்கும் தவறு செய்யக் கூடாது என்ற எண்ணத்தை உருவாக்கும் 1 தீமோ 5:20

15. வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு காட்டாதே. ஒரு காரியத்தைத் தீர விசாரிக்காமல் ஒருதலைப் பட்சமாய் தீர்ப்புக் கூருதே. இவை இரண்டும் ஒரு ஊழியன் செய்யக் கூடாத காரியங்களில் மிக முக்கியமானவைகள். நீ நடுவர் நிலையில் இருக்கிறுய். தவறு செய்கிறவர்களுக்குத் துணை போய் உன்னைக் குறைப் படுத்திக் கொள்ளாதே. 1 தீமோ 5:21, 22

16. தேவனுடைய நற்பெயருக்கும், அவர் மனிதனுக்குக் கொடுத்திருக்கிற உயர்ந்த நெறிகளுக்கும் பங்கம் உண்டாகும்படி ஒரு போதும் நடந்து கொள்ளாதே. 1 தீமோ 6:1

17. எல்லாப் பொல்லாப்புகளுக்கும் விலகி ஓடு, நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்த குணம் இவைகளை நாடு விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு. நித்திய ஜீவனைப் பெறுவதற்கு என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் பின் வாங்காதே. 1 தீமோ 6:11, 12

18. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை மட்டும் மாசு இல்லாமலும், குற்றமில்லாமலும் நான் உனக்குக் கொடுத்திருக்கிற கட்டளைகளைக் கைக்கொள். 1 தீமோ 6:13, 14

19. செல்வந்தர்கள் செல்வச் செறுக்கும் பணத்தைக் கொண்டு எதை-யும் சாதித்து விட முடியும் என்ற எண்ணம் இயற்கையாகவே ஏற்பட்டு விடும். அவர்களுக்கு செல்வத்தைக் கொடுத்தவர் தேவன் என்று நம்பும்படி உபதேசித்து அவருக்கு பிரியமான நன்மைகளை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவாக்க வேண்டும். அவர்கள் இந்த உலகத்தில் செய்யும் நற்காரியங்கள் பரலோகத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல இடத்தைப் பெற்று தரும் என்பதை அவர்களுக்கு விளங்க வைக்க வேண்டும். 1 தீமோ 6:17-19

20. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சத்தியத்தையும், உன்னுடைய விசுவாசத்தையும் காத்துக் கொள், வேண்டாத பிரச்னைகளை அலசிக் கொண்டு நேரத்தை வீணாக்காதே. தத்துவங்கள் என்ற பெயரில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும். குப்பைக் கொள்கைகளுக்கு செவி கொடாதே தீமோ 6:20

21. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியோ, அவருடைய உபதேசங்களை பிரகடனம் செய்வதால் நான் (பவுல்) சிறைப் படுத்தப்பட்டிருப்பதைப் பற்றியோ மனம் தளராதே, பச்சை மரத்துக்கே இந்தக் கதி. நமக்கு ஏன் வம்பு என்று ஒதுங்கிக் கொள்ளாதே. அவர் விட்டு வந்த பணியைத் தைரியமாய் தொடர்ந்து செய். துன்பம் வந்தாலும் ஏற்றுக் கொள்.
2 தீமோ 1:8.

22. கிறிஸ்தேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் (பவுல்) கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. 2 தீமோ 2:13

23. கிறிஸ்து இயேசுவில் உள்ள கிருபையில் வளர்ந்து பெருகு. கற்றுக் கொண்ட சத்தியத்தை மற்றவர்களுக்கு போதிக்கும் அளவுக்கு விவேகமும் உண்மையுமுள்ள மக்களிடம் பகிர்ந்து கொள்
2 தீமோ 2:12

24. கிறிஸ்து இயேசு என்னும் தளபதியின் கீழ் போர் முறைகளைக் கற்றுக் கொண்ட நல்ல போர் வீரனாக இரு. உலகக் காரியங்களில் சிக்கிக் கொள்ளாதே. அது ஆண்டவருக்குப் பிரியமல்ல 2 தீமோ 2:4

25. நான் (பவுல்) கூறும் நற்செய்தியின் கருப்பொருள் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் இயேசு பிறந்திருந்த போதிலும் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர் என்ற சிறப்புக்குரியவர் என்பதை நினைத்துக் கொள். 2 தீமோ 3:8

26. மேற்கூறிய காரியத்தை சகோதரர்களுக்கு நினைப்பூட்டு நீயும் சத்தியத்தை கவனமாய் வாசித்து தேவனுக்கு முன்பாக உத்தமனாக நடந்து கொள், சத்திய வசனத்தைப் பகுத்து தெளிவாய் போதகம் பண்ணு 2 தீமோ 2: 14, 15.

27. வாலிபப் பருவ விளையாட்டுகளுக்கு மனதில் இடங் கொடாதே, சுத்த இருதயத்தோடு கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும், விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு. 2 தீமோ 2:22

28. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைக்காரனாக இருக்கக் கூடாது. எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும் போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும், சத்தியத்தைச் சொன்னால் எதிர்தர்க்கம் செய்கிற மக்களுக்கு சாந்தமாய் உபதேசம் பண்ணு. காரணம் பிசாசு அவர்களுடைய கருத்துக் கண்களை குருடாக்கியிருக்கிறான், (2 கொரி 4:4) அவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களினால் பார்க்க தயை செய்யும்படி ஆண்டவரிடம் வேண்டிக்கொள், 2 தீமோ 2:24-26.

29. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு தங்கள் சுய நலத்தையும் தங்கள் மாமிச இச்சைகளையும் நிறைவேற்றுவதற்கு அதை ஒரு கேடயமாக பயன் படுத்துகிற சண்டாளர்களை விட்டு விலகிநட 2 தீமோ 3: 1-5

30. பவுல் அப்போஸ்தலனுக்கு ஏற்பட்ட இடுக்கண்களையெல்லாம் எவ்வாறு பொறுமையாக சகித்துக் கொண்டு தன் பணியை சாந்தத்தோடும், விசுவாசத்தோடும் அன்போடும் பொறுமையோடும் செய்தார் என்பதை நினைத்துப்பார். அவ்வளவு பாடுகள் பட்ட போதிலும் பவுல் சோர்வடையவில்லை. கர்த்தர் அவ்விதமான துன்பங்களிலிருந்து நம்மையும் விடுவித்துக் காப்பாற்றுவார் என்பது நிச்சயம். 2 தீமோ 3:10. 11.

31. தேவனுடைய வசனத்தின்பால் பயபக்தியாயிரு. அவைகள் மனிதர்களுடைய ஞானத்தால் தொகுக்கப்பட்டவைகள் அல்ல. தேவன் அருளிய திவ்ய வசனங்கள்; வாழ்க்கையின் சகல காரியங்களுக்கும் அதில் ஆலோசனை உண்டு என்பதை உணர்ந்து கொள். 2 தீமோ 3:14-17.

32. கிடைக்கிற எந்த சந்தர்ப்பத்தையும் நழுவ விடாமல் சத்திய வசனத்தை எடுத்துச் சொல், கடிந்து கொண்டு புத்தி சொல். ஆனால் சத்திய வசனத்துக்கு ஒத்து இருக்க வேண்டும் அதே சமயத்தில் கோபாவேசம் இல்லாமல் சாந்தமாயிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விட கொஞ்சம் 'மசாலா' பிரசங்கங்களைக் கேட்டுப் பழகினவர்கள், அதற்காக சத்தியத்தை விட்டுக் கொடுக்காதே. உன்னைக் குறை கூறி இகழ்ந்து பேசி தூஷித்தாலும் கவலைப் படாதே. சத்தியத்தை தைரியமாய்க் கூறு. மீதியைக் கர்த்தர் கையில் விட்டு விடு 2 தீமோ 4: 1-5.

33. நல்ல போராட்டத்தைப் போராடு, மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது கர்த்தர் நீதியின் கிரீடத்தை உனக்குத் தருவார். 2 தீமோ. 4: 7-8. ராய் லேவி

# உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பிரகாசிக்கக் கடவது

கிறிஸ்தவர்கள் உலக முழுவதையும் கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள பிரசாரப்படுகின்றனர். அதற்கு அவர்கள் இவ்வளவு சிரமப்பட்டத் தேவையில்லை. கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற அனைவரும் இயேசு போதித்தப்படி வாழ்ந்து காட்டினால் சுலபமாக அதை சாதித்து விடலாம்'' என்று நமது நாட்டின் தந்தை'' என்று பாராட்டப்படும், மகாத்மா காந்தி அடிகள் ஒரு முறை சொன்னாராம். அவர் தம்முடைய வாழ்க்கையில் காட்டிய பெறுமைக்கும் தாழ்மைக்கும் இயேசுவின் போதனைகளே முழுக் காரணம் என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஒருவனுடைய வாழ்க்கை தூய்மையாய் இருக்க வேண்டும். என்பதை இயேசு மிகவும் வலியுறுத்துகிறார். 'கிறிஸ்தவர்கள் மாய்மாலக்காரர்கள் சபைகளில் உள்ள முக்கிய புள்ளிகளின் வாழ்க்கை அருவருக்கத் தக்கதாக இருக்கிறது என்று குற்றச் சாட்டுகளைச் சொல்லுகிறவர்களுடைய யோக்கியதையும், நோக்கமும் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளென்று நான் சொல்லவில்லை. ஏனெனில் அப்படிச் சொல்லுகிறவர்கள் தாங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளாததற்கு அதை ஒரு கேடயமாக பயன்படுத்துகின்றனர் என்பதே உண்மை,

அதற்காக அவர்கள் கூறுவதை முற்றிலும் ஒதுக்கி விட முடியாது கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை முறைகள் பிறர் பார்த்துப் பின் பற்றக் கூடியவைகளாயில்லை என்பதை நாம் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். உங்கள் செயல்பாடுகள் நீங்கள் சொல்வதை விட அதிக சத்தமுள்ளவைகளாயிருப்பதால் அவைகளை என்னால் கேட்க முடியவில்லை என்றார் ஒரு அறிஞர். அது உண்மையே. நன்மைக்கானாலும் சரி தீமைக்கானாலும் சரி முன் மாதிரி முக்கிய பங்கு வகிக்கிறது. ஆகவே நம்முடைய வாழ்க்கை உலகத்தாருக்கு முன்பாக எப்படியிருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களில் மிகவும் வலியுறுத்தப் படுகிற விஷயம் ஒழுக்கமுள்ள பரிசுத்தமுள்ள வாழ்க்கை. கேட்பதை விட காண்பதையே மக்கள் அதிகமாய் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே அவரை பின்பற்றுகிற மக்களின் வாழ்க்கை மற்றவர்கள் பார்த்துப் பின்பற்றக் கூடியதாய் இருக்க வேண்டும் என்று அடிக்கடி அவர்கள் மனதில் பதியும்படி சொல்லிக் கொண்டேயிருந்தார்;

1. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் (மத் 5:13) என்றார். எப்படி உப்பு தன்னைக் கரைத்துக் கொண்டு, பண்டங்களுக்கு உருசி

கொடுக்கிறதோ அதே போன்று நீங்கள் தியாக உள்ளமுள்ளவர்களாக இருந்து மற்றவர்களுக்கு பயன் பட வேண்டும் என்றும் அவ்விதமான தியாக வாழ்வுக்கு நீங்கள் தயார் இல்லை என்ருல் நீங்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதில் எவ்வித பயனுமில்லை.

2. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மத். 5:14. எப்படி வெளிச்சம் மக்களுக்கு சரியான பாதையைக் காட்டுவதற்கு உதவுகிறதோ அது போன்று கிறிஸ்தவர்கள் மக்களுக்குச் சரியான பாதையைக் காட்ட வேண்டும். உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் சிக்கிக் கிடக்கிறது (1 யோவான் 5:19.) என்றும், ஆகையால் உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது (மத்5:16.) என்றும் கூறுகிருர்.

3. மலையின் மேல் இருக்கிற பட்டணம்...(மத் 5:14) நாம் உண்மையாக இயேசுகிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களைக் கைக்கொண்டு நடந்தால் மலையின் மேல் இருக்கிற பட்டணம் எப்படி எல்லா மக்களாலும் எளிதில் பார்க்க முடியுமோ அவ்வாறு நம்மையும் மக்கள் எளிதில் கண்டு கொள்வார்கள்.

4. மனிதர்கள் உங்கள் நற்காரியங்களைக் கண்டு (மத் 5:16. நம்முடைய நற்கிரியைகள் மக்கள்க பரலோகத்திலிருக்கிற தேவனை மகிமைப் படுத்துவதற்கு காரணமாக இருக்கும் (தானியேல், சாத்ராக் மேஷாக், ஆபேத் நேகோ ஆகியோரின் வாழ்க்கையை வாசித்து சிந்திக்கவும்) யாக்கோபு 2:14-16.

5. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினுல் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் (யோவான்" 13:35.) கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்விதமாய் நடந்து கொள்கிருர்கள் என்பதை உலகம் கவனிக்கிறது நாம் ஒருவருக்கொருவர் கடித்துப் பட்சிப்போமாஞல் (கலா 3:15) யார் நம்மோடு சேர்ந்து கொள்ள விரும்புவார்கள்? மாருக நாம் ஒருவரை ஒருவர் நேசித்து அன்பு கூர்ந்து ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கும் மனப் பக்குவமுள்ளவர்களாக இருந்தால் நம்மோடு சேர்ந்து கொள்ள மற்றவர்களும் ஆசைப்படுவார்கள் (1 யோவான் 2:15-18; 4:7, 8, 11, 19, 20.)

6. மத் 5:1-12ல் அடங்கியுள்ள பாக்கிய வசனங்கள் என்னும் மலைப் பிரசங்கத்தின் ஒரு பகுதியை வாசித்து அதிலுள்ள குணதிசயங்களை நாம் பெற்றுக் கொள்ள நாள் தோறும் முயல வேண்டும்.

7. மத் 25;34-46 நாம் மற்றவர்களுக்கு என்ன செய்கிறேம், செய்யாமல் இருக்கிறேம் என்பதை வைத்தே நாம் நியாயம் தீர்க்கப்படுவோம் என்ற கருத்தைத் தெளிவாகச் சொல்லுகிறது.

ஆகையால் நாம் நன்மை செய்யும்போது இயேசு கிறிஸ்து அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்குரிய பலனைக் கொடுப்பார் என்ற விசுவாசத்தோடு செயல்பட வேண்டும்,

8. மேலும் சகோதர ஐக்கியம் அவசியம் என்பதை இயேசு தமது நீண்ட ஜெபத்தில் குறிப்பிடுகிறார் (யோவான் 17:21) நம்முடைய ஐக்கியத்தைப் பார்த்து நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்றும் தேவன் தான் கிறிஸ்துவை உலகத்துக்கு அனுப்பினார் என்பதையும் உலகத்தார் விசுவாசிப்பார்கள். பிரிவினைகளும், ஆளுக்கு ஒரு உபதேசமும் கிறிஸ்தவத்தின் சிறப்பைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறதை சில கிறிஸ்தவர்கள் உணராமலிருக்கிறார்கள். மாறாக அதைக் குறித்துப் பெருமை வேறு. அப்பொழுது தான் விரைவில் சத்தியத்தை உலகம் முழுவதும் பரப்ப முடியும் என்பது பிசாசின் போதனை.

9. மாய்மாலம் கிறிஸ்துவுக்கு மிக அருவருப்பான குணம். மற்ற குணக் கேடுகளைப் பற்றி அனுதாபப்படுகிற சாந்தமும் பொறுமையுமுள்ள ஆண்டவர், மாய்மாலக்காரர்களை மட்டும் கடுமையாக விமர்சித்து ஆத்திரப்படுகிறார். (மத்தேயு 23-ம் அதிகாரத்தை வாசித்து தியானிக்கவும்) ஆண்டவர் மட்டுமல்ல; மனிதர்கள் கூட மாய்மாலத்தை வெறுக்கிறார்கள்.

10. நீங்கள் எப்படி நடத்தப்பட்டால் உங்களுக்கு மகிழ்ச்சியாயிருக்குமோ அதே போல மற்றவர்களையும் நடத்துங்கள். அதைத்தான் தங்கச் சட்டம் என்று போற்றப்படும் மத் 7:12 கூறுகிறது. அதை நாம் செய்யும் அளவுக்கு பண்பட்டு விட்டால் கிறிஸ்தவத்துக்கு நாம் எதிர்பார்க்கிறதுக்கும் அதிகமான மதிப்பு உண்டாகும்.

11. நாம் யாரைப் பின்பற்றுகிறோம் என்பதைக் குறித்து உஷாராக இருக்க வேண்டும். பரிசேயர்களுடைய உபதேசத்தைக் குறித்து இயேசு கூறியதை கவனியுங்கள். 'அவர்கள் செய்கையின் படியே செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள். சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்' என்கிறார். மத் 23:3; அதையே யாக்கோபும் கீழ்வரும் வசனத்தில் கூறுகிறார் யாக் 1:22. ஆம், சகோதரர்களே! சொன்னதைச் செய்ய வேண்டும்; செய்வதை சொல்ல வேண்டும் அப்படிச் செய்தால் மக்கள் நம்மை மதிப்பர்; கிறிஸ்தவமும் வளரும்.

12. இயேசுவின் மலைப்பிரசங்கம் மத்தேயு 5, 6, 7 ஆகிய அதிகாரங்களில் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது. உலகத்தில் சான்றோர் என்று பாராட்டப்பட்டிருக்கிற மனிதர்கள் அனைவரும் அதன் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டதினாலேயே அப்பேறு பெற்றார்கள். நாமும் அவைகளைக் கைக்கொண்டு நம்முடைய வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

— J. J. டர்னர்

# இது என்னமாய் முடியுமோ?

சில தினங்களுக்கு முன்பு ஒரு கிறிஸ்தவ நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, வர வர கிறிஸ்தவ மார்க்கம் மூட நம்பிக்கைகளின் கூடாரம்'' ஆகிக் கொண்டு வருகிறது என்று வேதனையோடு குறிப்பிட்டார். அவர் கூறிய தில் உண்மையில்லாமல் இல்லை.

அரசியல் கட்சிகளின் பாணியைப் பின்பற்றி கன்வென்ஷன் என்ற பெயரில் பேச்சாற்றல் உள்ள பிரசங்கிமார்களை வெளியூர்களிலிருந்து தருவித்து, நோயாளிகளுக்காகவும், அசுத்த ஆவி பிடித்தவர்களுக்காகவும் அவர் வல்லமையாக ஜெபித்து குணப் படுத்துவார் என்று பெரிய அளவில் விளம்பரப்படுத்தி ஆர்பாட்டங்கள் செய்து கூட்டத்தைக் கூட்டுவதைப் பார்க்கிறோம்.

இன்னும் சிலர் வானொலி ஊழியத்தை பயன்படுத்தி. அந்தப் பிரசங்கியார் ஜெபிக்கும் நேரத்தில் பிணியாளிகள் தங்கள் வானொலிப் பெட்டியருகே அமர்ந்து தங்கள் நோயுற்ற அவயவத்தின் மீது கைகளை வைத்துக் கொண்டு விசுவாசத் துடன் கேட்டுக்கொண்டிருந்தால் அற்புத சுகம் பெற முடியும் என்று சபல புத்தியுள்ள மக்களை நம்ப வைத்து மாயம் பண்ணு கின்றனர் இவர்களுக்கு ஜாலரா போடுவதற்கென்றே சில மாதப் பத்திரிக்கைகள்—அற்புத சுகம் பெற்றவர்கள், படிக்காமலே பாஸ் செய்தவர்கள், உழைக்காமலே உயர்ந்தவர்கள், தீராத கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை பெற்றவர்கள் என்று வித விதமான சாட்சிக் கடிதங்களைப் பக்கம் பக்கமாக பிரசுரித்து ஒத்துழைப்புத் தருகின்றனர். சாட்சி சொல்லுகிறவர்களுக்கு ஓசியில் ஒரு விளம்பரம், பத்திரிகை நடத்துபவர்களுக்கு காணிக்கை என்ற பெயரில் சிறு கையூட்டு.

வருகிற அந்த வரம் பெற்ற பிரசங்கியாரும் சளைத்தவரல்ல. இருதய நோயால் வாடும் ஆரோக்கிய நாதனே! இதோ இன்றே இப்பொழுதே இயேசு உன்னைத் தொடுகிறார். உன் இருதயத்தின் பழுதடைந்த பாகம் சொஸ்தமாகி விட்டது அல்லேலுயா என்று முழங்குவார். கான்ஸர் நோயால் வாடும்

காபிரியேலே! கவலையை விடு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு காணிக்கைப் பெட்டியை நிரப்பு. கர்த்தர் உன் புற்றுநோயைப் போக்கி விட்டார் என்று உறுதிமொழி கொடுப்பார். பெண்கள் கூட்டத்தில் அமர்ந்திருக்கும் பொன்னம்மா! உன் வாழ்க்கையில் பொல்லாங்குகள் அகன்று போய்விட்டன. உன் புருஷன் மனம் திருந்தி விட்டான். உன் மாமியார் இனி உன் காலடியில் என்று ஆறுதல் அளிப்பார். தீய ஆவியால் பீடிக்கப்பட்டிருக்கும் தங்கம்! இப்பொழுது நீ தூய்மை அடைந்து விட்டாய். உடனே துதித்துப்பாடு என்று ஒரு விநோதமான ஒலி எழுப்புவார். குழுமியிருக்கிற மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்துக் கொட்டி முழங்கும். இந்த வேடிக்கையைத் திறம் பட செய்து காட்டுவதற்கென்றே சில பேர்வழிகள் ஸ்பெஷல் வரம் பெற்றிருப்பதாகக் கூறிக் கொள்வர். அவர்களுக்குச் சிறந்த போக்கு வரவு ஏற்பாடு, மாலை மரியாதை, ராஜ போஜனம், குளு குளு அறை வசதி, காணிக்கை என்ற பெயரில் அவருடைய புகழுக்கும், திறமைக்கும், செல்வாக்குக்கும் ஏற்ற விகிதத்தில் பெருந்தொகை, பட்டி தொட்டிகளில் எல்லாம் மாதக் கணக்கில் பல கலர் விளம்பரம் இன்னும் ஏதேதோ வசதிகள்,

சகோதரர்களே! இவைகளைப் பற்றி எழுதி உங்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்றோ அல்லது சம்பந்தப்பட்டவர்களை வெட்கப்படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்தோடே எழுதுகிறேன் என்று எண்ணி வருத்தமோ, கோபமோ அடையாதீர்கள். நாம் இவைகளைப் பற்றி சிந்திக்கத் தொடர்ந்து மறுப்போமானால் கிறிஸ்தவத்துக்கு வேறு எதிரிகளே வேண்டியதில்லை. வெற்றிகரமாக நாமே அதற்கு வெகு விரைவில் சமாதி கட்டி சாந்தும் பூசிவிடுவோம்.

கிறிஸ்தவ அறம் தழைக்கவேண்டும் என்று எண்ணும் சான்றோரே! தாய்க்குலமே!!

இந்நிலை மாற ஏதாவது செய்ய வேண்டாமா? எதிர்வரும் 1989–ஆம் ஆண்டு ஜனவரி 13, 14 தேதிகளில் இதைப்பற்றிச் சிந்தித்து நல்ல முடிவுகள் எடுக்கும் நோக்கத்தோடு கிறிஸ்தவ சிந்தனையார்கள் கருத்தரங்கம் ஒன்றினைக் கூட்டியிருக்கிறோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிந்தனைச் செம்மல்கள் வருகை தருகிறார்கள். நீங்களும் வந்து உங்கள் கருத்துக்களை கூறலாம் ஜெபத்துடன் வருகை தாருங்கள்.

ஜெபியுங்கள்! பங்கு கொள்ளுங்கள்!!

# கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் கருத்தரங்கம்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு 638002

நாள் : ஜனவரி 13, 14 - 1989 (வெள்ளி, சனி)

நேரம் : காலை 9 மணி முதல் 6 மணி வரை

பொருள் : வேதாகம அடிப்படையில் கிறிஸ்தவ ஒற்றுமை.

1. கிறிஸ்தவ ஒற்றுமையில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்.
2. கருத்துத் தெரிவிக்க விரும்புகிறவர்களும், கலந்து கொள்ள விரும்புகிறவர்களும் 3-1-89க்குள் தங்கள் விருப்பத்தை விழாக் குழுவினருக்குத் தெரிவிக்கவும்.
3. மேடையில் பேசுவதற்கு அனைவருக்கும் வாய்ப்புத்தர நேரம் போதாது. அப்படி வாய்ப்பைப் பெற முடியாதவர்கள், தங்கள் கருத்தினை எழுதிக் கொடுக்கலாம். அதற்கென தயாரிக்கப்படும் மலரில் பிரசுரித்து கௌரவப் படுத்துவோம்.
4. பதிவுக்கட்டணம் ரூ. 2-00 உண்டிக்கும் உறைவிடத்துக்கும் (இரண்டு நாட்களுக்கும் சேர்த்து ரூ. 10-00) பதிவுக்கட்டணத்தை M. O. செய்துவிட்டு M. O. கூப்பனில் எண்ணைக் குறிப்பிடவும். உணவுக் கட்டணத்தை வந்தபின் செலுத்தவும். உணவுக் கட்டணம் செலுத்த முடியாதவர்கள் மட்டும் பதிவுக்கட்டண M. O. கூப்பனில் எண்ணைக் குறிப்பிட்டு கூப்பனில் 'உணவுக் கட்டணம் செலுத்த வசதியில்லை' என்று தெளிவாகக் குறிப்பிடவும்.
5. வரவிரும்பியும் முடியாதவர்கள் உங்கள் பொருளால் இந்நிகழ்ச்சியைத் தாங்குங்கள். வசதியில்லாத சகோதர சகோதரிகளைப் போஷிப்பதற்கும் நிகழ்ச்சிச் செலவுகளுக்கும் உதவியாக இருக்கும்
6. முன்பதிவு அவசியம் M. O. பதிவுக்கட்டண ரசீது எண்ணைக் குறிப்பிட்டு ஒரு P. C. எழுதுங்கள். விண்ணப்பப்பாரம் என்றால் செலவு கூடுதலாகும். தயவு செய்து ஒத்துழையுங்கள்.
7. குளிர்காலம். படுக்கை, போர்வை தேவைப்படும். வேதாகமம் குறிப்பேடு எழுதுகோல் அவசியம் என்பது உங்களுக்கும் தெரியும்

இன்னணம்

கருத்தரங்க விழாக் குழுவினர்.

தொடர்பு முகவரி

E. Z. செல்வநாயகம்,

2, மணல்மேடு வீதி,

ஈரோடு-638 002

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9:00to 9:15 P. M'
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M.
Thursdays-9:00to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2;45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M
Fridays-2:30 to 2:45 P. M
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களுக்கு

## வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

எங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு பத்திரிகை வந்து சேருவதைக் குறித்தும் வராததைக் குறித்தும், எழுதி தங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து தேவ பணியைத் தாங்கினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஆயினும் இன்னும் சிலபேர் ஒத்துழைப்புத்தர விரும்பியும் சாத்தானால் ஏதோ ஒருவகையில் கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களுக்காக நீங்களும் ஜெபியுங்கள். அவர்கள் இந்த மாதத்திலாவது நமது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தேவ பணி நல் முறையில் நடைபெற சிரமங்களைப் பாராமல் ஒத்துழைக்க மன்றாடுகின்றோம். இதை நீங்கள் கர்த்தருக்காகச் செய்கிறீர்கள் என்று நினைத்தால் எல்லா தடைகளும் நொறுங்கி வழி பிறக்கும்.

ஆசிரியர்

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.